

පරිපාලන අභියාචන විනිශ්චය අධිකාරය - පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තු වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை-பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Administrative Appeals Tribunal-submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4).

பாராளுமன்ற தொடர் இலக்கம் 183 நிறுவனத்தின் பெயர் :- நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை (நீதிமன்றமாக காண்பிக்கப்பட்டுள்ளமை சரியாகும்.)	
பொது கணக்கு குழு அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகள்	கூறப்பட்ட குறைப்பாடுகளை செவ்வையாக்கி கொள்வதற்கு நிறுவனத்தால் மேற்கொண்ட செயற்பாடுகள் மற்றும் தற்கால நிலைமை
i.முதலாவது பகுதி: 85.00	2020 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வரவு செலவு அட்டவணை 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதுவரை இடைக்கால கணக்கு மூலம் அவ்வப்போது பணம் ஒதுக்குவதற்கு திறைசேரி நடவடிக்கை மேற்கொண்டமையால் செயற்றிட்டம் தயாரிக்க முடியாதிருந்தது. எவ்வாறாயினும், அதன் பின்னர் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
ii.வருடாந்த கொள்வனவு திட்டம் தயாரிக்கப்படவில்லை.	நியாய சபையின் பொருட்டு அன்றாடம் தேவையான எழுதுகருவி பொருட்கள் போன்றவற்றை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனத்திடமிருந்து சிறிய அளவில் கொள்வனவு செய்த படியால், கொள்வனவு திட்டம் தயாரிக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக எழுதுகருவி பொருட்களுக்கு ரூபா.800,000 மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.
iii திரட்டிய வருமானம் உரிய ஏற்பாடுகளுக்கமைவாக மீள செலுத்தப்பட்டிருந்தது. திரட்டிய வருமானம் நேரடியாக வருமானத்தில் வரவு வைத்து அல்லது அவற்றை வைப்புக் கணக்கில் சேமித்து ஒரு மாதத்திற்கு குறைந்த காலப்பகுதிக்குள் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.	அவதானிப்புகள் இந்த அதிகார சபைக்கு ஏற்புடையதாகாது. வருமானக் கணக்கு மற்றும் வைப்புக் கணக்கு அதிகார சபையிடம் இல்லை. அதிகார சபைக்கு உரியதான ஒரே வருமானம் நிழற்படப் பிரதிகள் பொருட்டு அறவிடப்படும் கட்டணங்கள் மட்டுமே ஆகும். அவற்றை நாள்தோறும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு

	கணக்கு சாராம்சம் மூலம் திறைசேரியிடம் அறிக்கையிடப்படும்.
iv. 2002.09.12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரித்து கணக்காய்வாளர் அதிபதியிடம் பிரதி சகிதம் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	கோவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக செயலாற்றுகை அறிக்கை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதுடன், 2020 செயலாற்றுகை அறிக்கை 2022 சனவரி மாதம் 31 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் அதிபதியிடம் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
v. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி விஞ்சி ஆட்சேர்ப்புச் செய்தல்	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 20 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று கணக்காய்வாளர் அதிபதியால் 2020 கணக்காய்வு அவதானிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கை முறையிலான தீர்மானங்களின் மீது இவ்வாண்டிலும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இயலவில்லை.
இரண்டாவது பகுதி 43:00	
i.நிறுவனம் தொடர்பாக பொதுமக்களுக்கு தேவையான தகவல் வழங்குவதற்கு இணையதளம் நிருமாணித்து பராமரிக்கப்படாமை. நிறுவனம் பராமரிக்கப்படுகின்ற இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு பாராட்டுகள் அல்லது குற்றங்குறைகள் குறிப்பிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாமை	இது தொடர்பான அடிப்படை நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், பணம் கிடைக்கப்பெறாமை காரணமாக அதனை முன்னெடுப்பதற்கு முடியாதுள்ளது. மேற்படி விடயம் காரணமாக இந்தக் கூற்று ஏற்புடையதாகாது.
ii. 2018 சனவரி 24 ஆம் திகதி 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி உரிய வகையில் மனிதவள திட்டம் தயாரிக்கப்படவில்லை.	நிறுவனத்தின் மொத்த பதவியணி 18 ஆவதுடன், அதில் 07 பேர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்த ஓய்வு பெற்றவர்களாவார்கள். 13 வெற்றிடங்களும் உள்ளன. ஆகையால் ஊழியர்களை

	பயிற்றுவிப்பதற்கு ஆற்றல் இல்லை என்பதுடன், மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் பயனற்றதாவதால், அத்தகைய திட்டம் தயாரிக்கப்படவில்லை.
iii. தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் மூலம் ஒரு ஊழியரின் பொருட்டு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களிலான மேலதிக பயிற்சி விதிக்கப்படவில்லை.	மேற்படி விடயம் காரணமாக இக்கூற்று ஏற்புடையதாகாது.
ஒட்டுமொத்த பதவியணியும் அடங்கலாக உடன்படிக்கைகள் தயாரித்து உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கும் ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலர் ஒருவரை நியமனம் செய்யப்படவில்லை. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கியிருந்த பயிற்சி வாய்ப்புகளின் சதவீதம் 50% இற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	மேற்படி பந்தி காரணமாக இக்கூற்று நிறுவனத்திற்கு ஏற்புடையதாகாது

K. B. D. M. P. B. Dissanayake
Secretary
Administrative Appeals Tribunal